**Crl.Mp.8/2021**

**நாள். 16.12.2022**

**கணேசன், த.பெ. ராஜுகண்ணு, வயது 62, தாதம்பட்டி**

<u>சாட்சியின் சத்தியபிரமாண வாக்குமூலம்</u>

புகார்தாரர் எனது மகனாவார். கடந்த 30.07.2018 ஆம் தேதி சுமார் மாலை 06.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருக்கும்போது ஊத்தங்கரை நீதிமன்றத்திற்கு சென்று வந்த பிறகு மாலை 06.00 மணிக்கு கல்குமாரம்பட்டியைச் சேர்ந்த ஜெயலட்சுமி, க.பெ. குமார், ஜெயலட்சுமி மகன் கேசவன் மற்றும் பெயர் தெரியாத பத்து நபர்களை கூட்டி வந்தார்கள். கேசவன் கையில் தடி வைத்திருந்தார். ஜெயலட்சுமி கையில் துடைப்பம் வைத்திருந்தார். ஜெயலட்சுமி என்னை பார்த்து கண்டார ஓலி பையா, தேவிடியா பையா என்று அசிங்கமான வார்த்தையால் திட்டினார். கேசவன் கத்தி மற்றும் தொன்னை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வந்தார்கள். சம்பவ இடத்தில் இருந்தவர்கள் போலீசாருக்கு தகவல் சொல்லி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள். போலீசை கண்டவுடன் அந்த பத்து நபர்கள் ஓடிவிட்டார்கள். சம்பவம் குறித்து போலீசாருக்கு தெரிவித்து போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் மேலதிகாரிகளுக்கு புகார் அளித்தேன். அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**Crl.Mp.8/2021**

**நாள். 16.12.2022**

**சின்னசாமி, த.பெ. ராஜுகண்ணு, வயது 52, தாதம்பட்டி**

**<u>சாட்சியின் சத்தியபிரமாண வாக்குமூலம்</u>**

கடந்த 30.07.2018 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் குமாரம்பட்டியைச் சேர்ந்த புகார்தாரரின் சம்மந்தக்காரர்கள் கார், வண்டியில் 12 நபர்கள் வந்தார்கள். அவர்கள் வந்து கூச்சல் போட்டார்கள். நான் அங்கு சென்ற போது நீ அவர்களுக்கு ஆதரவாக வருகிறாயா என்று என்னை அடிக்க வந்தார்கள்.. நாங்கள் போலீசில் சொன்னோம். போலீசார் வந்தவுடன் அவர்கள் ஓடி விட்டார்கள். நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் போலீசார் சம்பவம் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**Crl.Mp.8/2021**

**நாள். 16.12.2022**

**பழனிசாமி, த.பெ. ராஜுகண்ணு, வயது 42, தாதம்பட்டி**

**<u>சாட்சியின் சத்தியபிரமாண வாக்குமூலம்</u>**

கடந்த 30.07.2018 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் புகார்தாரரின் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வருகிறேன். கூச்சல் சத்தம் கேட்டது. நான் ஓடி வந்து பார்த்த போது புகார்தாரரின் மாமியார் ஜெயலட்சுமி மற்றும் அவரது தங்கை அவரோடு சிலரும் வந்திருந்தார்கள். அவர்கள் பெயர்கள் தெரியாது. வந்திருந்த நபர்கள் கையில் கத்தியும், தொன்னையும் வைத்திருந்தார்கள். அவர்கள் புகார்தாரரை மிரட்டினார்கள். நான் சமாதானம் செய்து வைக்க முயற்சித்த போது வந்திருந்த நபர்கள் கண்டார ஓலி தேவிடியா பையா என்று அசிங்கமாக பேசினார்கள். சம்பவம் கேள்விப்பட்டு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள். போலீசார் வந்து சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்கள், மறு நாள் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.